# அவசரக்கூட்டப்பொருள்

1. தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 82–ன்படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராட்சியால் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6–A -ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம் ) சட்டம் –2018, (2018, தமிழ்நாடு சட்டம் 6)–ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1)(சி)–க்கு கீழ்க்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

**AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT, 1920**

**5. In Section 83 of the Tamil Nadu District Municipalities Act, 1920, in sub-section** (1)

(1) for clause (c), the following clause shall be substituted, namely:-

"(c) buildings used for educational purpose including hostels and libraries, run by the Government or Municipality or any other local authority or institutions aided by the Government and buildings used for charitable purpose of sheltering the destitute or animals and orphanages, homes and schools for the deaf and dumb, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council:

Provided that the buildings used for educational purpose by the Government aided institutions for conducting self-financing courses shall be subject to levy of property tax;":

(2) in the proviso, for the Expression "clauses (a), (c) and (e)", the expression "clauses (a) and (e)" shall be substituted.

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும். எனவே :–

1) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்.

2) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் ,1920, பிரிவு 83(1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கவும்.

3) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.

4) கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்.

5) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)–ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரையாண்டிலிருந்து, மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.

6) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 78(3)–ன் படி ஆட்சேபனைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.4370/2018/அ1

**தீர்மானம் எண். 134– அங்கீகரிக்கப்பட்டது.**